Amãna Bank

## லீசிங் (வாகன குத்தகை)

நாம் உங்களுக்குத் தேவையான வாகனம், இயந்திரம், உபகரணம் என்பவற்றைக் கொள்வனவு செய்து, ஏற்றுக்கொள்ளப்பட்ட காலத்திற்கு வாடகைக்கு விடுவதன் மூலம் உங்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்தியாக்குவதோடு, வாடகைக் காலம் முடிந்தவுடன் அதன் உரிமையை உங்களுக்குரித்தாக்குவோம்.

### அம்சங்கள் மற்றும் அனுகூலங்கள்

- சேவைக் கோட்பாடு: இஜாரா
- நியாயமான மாதாந்த வாடகைக் கட்டணங்கள்
- 5 ஆண்டுகள் வரையான வாடகைக் காலம்
- பெறுமதியின் 100% வரை வாடகையாக வழங்கப்படும்
- பாவனைக்கு எடுத்த பின்னர் மட்டுமே வாடகைத் தவணையைச் செலுத்த வேண்டும்.
- செயற்படும் நிலையில் இருந்தால் மட்டுமே வாடகைத் தவணையைச் செலுத்த வேண்டும். (நிபந்தனைகளுக்கு அமைவானது)

### தேவையான ஆவணங்கள்

- தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திரம்
- வர்த்தக நிறுவனங்களின் வர்த்தகப் பதிவுச் சான்றிதழ்
- கடந்த 6 மாத கால வங்கி அறிக்கைகள்
- கடந்த 3 வருட கால கணக்காய்வுகள் மற்றும் வரி தரவுகள் (தேவையாயின்.)
- Profoma Invoice/ வழங்குனர் அல்லது முகவரிடமிருந்து சொத்துக் கான விலைக்கோரல்/ மதிப்பீட்டு அறிக்கை
- தற்போதைய ஊதியத்திற்கான அல்லது வேறு வருமானத்திற்கான அத்தாட்சிகள்.

## கருத்துகளும் முறைப்பாடுகளும்

எமது கிளைகளிலும், www.amana.lk எனும் இணையத்தள முகவரியிலுமுள்ள “எங்கள் சேவை பற்றிய உங்கள் அனுபவத்தை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்” எனும் படிவத்தின் மூலம் எமது சேவை பற்றிய உங்களது பெறுமதிமிக்க கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.

எமது சேவை பற்றிய முறைப்பாடுகளை பின்வரும் வழிமுறைகள் மூலம் அறியத் தரவும்

1. கிளை முகாமையாளரை அணுகுவதன் மூலம்
2. முறைப்பாடுகளை feedback@amana.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலம்
3. 0117 756 756 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம்
4. எமது பின்வரும் இணையத்தள முகவரியிலுள்ள “தொடர்பு கொள்ளவும்” பக்கத்தில் தகவல் கொடுப்பதன் மூலம்

உங்கள் முறைப்பாடுகள் தொடர்பான எமது நடவடிக்கைகளை நாம் உங்களுக்கு அறியத்தருவோம்.

## அசைவுள்ள ஆதனத்திற்கு
## குத்தகை உடன்படிக்கை இல. ……

பின்வரும் திறத்தவர்களாலும் அவர்களுக்கிடையேயும் செய்துகொள்ளப்படும் இந்த உடன்படிக்கையாவது:

இலங்கையில் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டதும் PB 3618 என்னும் பதிவிலக்கம் கொண்டதும் இல. 480, காலி வீதி, கொழும்பு 3 என்னும் முகவரியில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும் ……………………….என்னும் முகவரியில் கிளை அலுவலகமொன்றையும் உடையதுமான ஒரு கம்பனியாகிய அமானா பேங்க் லிமிட்டெட்டிற்கும் (இதனக்துப்பின்னர் "குத்தகை விடுநர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் (இச்சொற்பதம் சந்தர்ப்பம் அவ்வாற தேவைப்படுத்துமிடத்து அதன் பின்னுறுபவர்கள், சாட்டுதல்காரர்கள் ஆகியோரையும் உள்ளடக்கும்)

அத்துடன்

……………………………………………………………………………………………………………………………என் னும் முகவரியைச் சேர்ந்த …………………………………………………………………………......…………………என்பவருக்கும் இடையில் (இதனகத்துப்பின்னர் "குத்தகை பெறுநர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார் (சந்தர்ப்பம் அவ்வாறு அனுமதிக்குமிடத்து இச்சொற்பதம் அதன் பின்னுறுபவர்கள் அனுமதிக்கப்பட்ட சாட்டுதல்காரர்கள் ஆகியோரையும் உள்ளடக்கும்.) செய்துகொள்ளப்படும் உடன்படிக்கையாவது:

மேற்படி குத்தகை விடுநரும் குத்தகை பெறுநரும் இதனகத்துப்பின்னர் தனித்தனியாக 'திறத்தவர்'எனவும் கூட்டாக 'திறத்தவர்கள்' எனவும குறிப்பீடு செய்யப்படுவர்.

குத்தகை விடுநர் கண்டிப்பாக ஷாரியா கோட்பாடுகளுக்கியொழுகும் வகையில் முதலீடு செய்கின்றதாதலாலும் ;

குத்தகை பெறுநர் ஷாரியா கோட்பாடுகளுடன் இணங்கியொழுகும் வகையில் குத்தகை சில ஆதனத்தைக் கொள்வனவு செய்து அதனைக் குத்தகை பெறுநருக்கு குத்தகைக்கு விடுமாறு குத்தகை விடுநருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் ஆதலாலும் திறத்தவர்கள் இந்த குத்தகை நியதி நிபந்தனைகளுக்கமைய அத்தகைய குத்தகையை நிறைவேற்ற உடன்பட்டுள்ளனர் ஆதலாலும்

இப்பொழுது இந்த உடன்படிக்கையால் வெளிப்படுத்தப்படுமாறு இதனகத்துப்பின்னர் தரப்படுகின்ற பரஸ்பர உடம்பாட்டு உறுப்புரைகளுக்காகவும் வாக்குறுதிகளுக்காகவும் அவற்றிற்கு கிரயமாகவும் திறத்தவர்களாலும் அவர்களுக்கிடையேயும் இத்தால் பின்வருமாறு உடன்பட்டுக்கொள்ளப்படுகின்றது:

### 1.0 குத்தகை

1.01 கீழேயுள்ள அட்டவணை 'அ' என்பதில் இதனகத்துப்பின்னர் நன்கு விவரிக்கப்படும் மேற்படி குத்தகை ஆதனத்தை அதனுடன் இணைக்கப்பட்ட எல்லா துணையுறுப்புளும் அத்துடன் குத்தகை தவணைக்கு இந்த குத்தகை உடன்படிக்கை நடைமுறையிலிருக்கும்பொழுது அத்தகைய குத்தகை ஆதனத்திற்குச் செய்யப்படக்கூடிய அனைத்து மாற்றங்களும் மாற்றீடுகளும் அத்துடன்/அல்லது சேர்த்தல்களும் உட்பட (கீழே 2.01ஆம் வாசகத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு) இதன்கண்ணும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையிலும் அடங்கியுள்ள நியதிகள், நிபந்தனைகள், உடம்பாடுகள், விதிப்புரைகள் என்பவற்றிற்கமைய குத்தகைக்கு விடுவதற்கு குத்தகை விடுநர் இத்தால் உடன்படுகின்றது என்பதுடன் குத்தகை பெறுநர் அதனை குத்தகைக்கு எடுப்பதற்கும் உடன்படுகின்றார்.

### 2.0 குத்தகையின் நியதிகளும் வாடகைகளும்

2.01 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவையில் தரப்பட்டுள்ளவாறு இத்தால் அளிக்கப்படும் குத்தகையின் காலப்பகுதி (இதனகத்துப்பின்னர் 'குத்தகை தவணை' எனக்குறிப்பீடு செய்யப்படும்) இதன் நியதி நிபந்தனைகளுக்கு அமைவானதாகும் என்பதுடன் தொடங்கும் திகதியன்று ஆரம்பமாதல்வேண்டும் (இதற்கான அட்டவணை 'அ' என்பதில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு). இது இத்துடன் இணைக்கப்பட்டள்ளதும் இதன் ஒரு பாகமாக அமையவேண்டியதுமான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் ஏற்றுக்கொள்ளல் பற்றுச்சீட்டொன்றினால் சான்றுபடுத்தப்பட்டவாறு குத்தகை ஆதனம் குத்தகை பெறுநருக்கு உருப்படி ரீதியில் ஒப்படைக்கப்படும் திகதியாதல் வேண்டும்.

2.02 குத்தகை ஆதனம் தொடர்பில் குத்தகை பெறுநரால் செலுத்தப்படவேண்டிய வாடகை இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டள்ளவாறாதல்வேண்டும். குத்தகை தவணை முழுவதற்கும் குத்தகை விடுநரால் வழங்கப்பட்ட குத்தகை வசதியின்மீது ஆண்டொன்றுக்கு …..% வீதப்படி இலாப அதிகரிப்பு உட்பட மாதமொன்றுக்கு ……......….ரூபா ஆகும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் "அ" என்பதில் ஏற்பாடு செய்யப்பட்டள்ள அட்டவணைக்கிணங்க செலுத்தப்படுதல் வேண்டும். குத்தகை பெறுநரால் இதன்கீழ் செலுத்தப்படவேண்டிய வாடகை கழிப்பனவு அல்லது சீராக்கங்கள் எவையுமின்றியும் இந்த வாசகம் 2.0 என்பதன் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமையவும் அட்டவணை 'அ' என்பதில் குறித்துரைக்கப்பட்ட தொகைகளில் குத்தகை பெறுநரால் கிரமமாகவும் காலம் தவறாமலும் செலுத்தப்படுதல் வேண்டும்.

2.03 குத்தகை பெறுநரின் தவறின் காரணமாக அல்லாமல் குத்தகை ஆதனம் சேதமடைந்திருப்பின் தெய்வச் செயலின் விடயத்திற்போன்ற (வாசகம் 13.06) ஒரு விடயத்தில் (இது குத்தகை விடுநரால் ஏக தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படுதல் வேண்டும்) குத்தகை பெறுநா குத்தகை ஆதனத்தை வேறு வகையில் இயக்க முடியாதிருப்பின் குத்தகை விடுநர் அதன் ஏக, பூரணமான தற்றுணிபின்படி பின்னவரும் சூழ்நிலைகளில் குத்தகை விடுநர் நியாயமானதெனக் கருதும் ஒரு காலப்பகுதிக்கு இதற்கான அட்டவணை "அ" என்பதில் செலுத்தப்படற்பாலதான வாடகையில் தணிப்பொன்றுக்கு எழுத்தினால் சம்மதிக்கலாம்.

(அ) குத்தகை ஆதனம் நியாயமானவொரு காலப்பகுதிக்குள் தருத்தப்படலாம் என குத்தகை விடுநர் கருதும்பட்சத்தில்; அல்லது
(ஆ) குத்தகை ஆதனம் முறையாக செயற்படுவதைப் பாதிக்கும் சூழ்நிலைகள் நியாயமான காலப்பகுதியொன்றிற்குள் தணிந்துவிடும் எனக் குத்தகை விடுநர் கருதும்பட்சத்தில்.

ஆயினும் குத்தகை விடுநரால் அனுமதிக்கப்பட்ட தணிப்புக் காலப்பகுதி முடிவுறுவதன்மீது இந்த குத்தகை உடன்படிக்கையின்கீழ் வருமதியான எல்லா வாடகைக் தொகைகளும் வருமதியாதல்வேண்டும் என்பதுடன் இதற்கு நேரொத்ததாக குத்தகை தவணை நீடிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2.04 குத்தகை ஆதனம் பயன்படாததாக்கப்பட்டள்ளதாக, எந்த தெய்வச் செயலினால் குத்தகை ஆதனத்தை குத்தகை பெறுநரால் நியாயமாக பாதுகாத்திருக்க முடியாதிருந்ததோ அந்த தெய்வச்செயலினால் (வாசகம் 13.06) அழிக்கப்பட்டுள்ளதாக அல்லது சேதப்படுத்தப்பட்டுள்ளதாக குத்தகை விடுநர் அவரது ஏக, பூரண தற்றுணிபின்படி திருப்தியடையும்பட்சத்தில் குத்தகை விடுநர் அதன் ஏக, பூரண தற்றுணிபின்படி "மொத்த இழப்பின்" சம்பவம ஒன்றாக குத்தகை முடிவுறுத்தப்படுவதை அனுமதிக்கலாம். ஆயினும் அத்தகைய பயன்படாத தன்மை, அழிவு அல்லது சேதம் குத்தகை பெறுநரின், அல்லது குத்தகை பெறுநரின் சேவையாளர்களின், முகவர்களின், ஊழியர்களின் அத்துடன் ஒப்பந்தக்காரர்களின் அசட்டையினால், துர்நடத்தையினால் ஏதேனும் செயலினால் அல்லது செய்யாமையினால் ஏற்பட்டதல்ல என குத்தகை விடுநர் கருதுதல் வேண்டும்.

2.05 இதன்கீழ் செலுத்தப்படற்பாலதான எந்த வகையினதுமான எல்லா வாடகைத் தொகைகளும் வேறு செலவுகளும் அறவீடுகளும் வாசகம் 13.04 (அறிவித்தல்) என்பதில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு குத்தகை விடுநரின் அலுவலகத்தில் இலங்கை ரூபாவில் செலுத்தப்படுதல் வேண்டும்.

### 3.0 ஒப்படைத்தல்

குத்தகை ஆதனம் ஒப்படைக்கப்படுவதன்மீது குத்தகை ஆதனம் சீராக செயற்படும் ஒழுங்கிலும் நிலையிலும் தோற்றத்திலும் எல்லா அம்சங்களிலும் பூரணமாதாகவும் குத்தகை பெறுநர் திருப்தியுறும் வகையிலும் இருப்பதனை உறுதிப்படுத்தி இதன்கீழ் அட்டவணை ஆ என்பதில் தரப்பட்டுள்ள படிவத்தில் ஏற்றுக்கொள்ளற் பற்றுச்சீட்டு ஒன்றை குத்தகை பெறுநர் முறையாக நிறைவேற்றுதல் வேண்டும்.

(1) ஆதனத்திற்கான வாடகை, கொடுப்பனவு செய்யப்படும் முறை, திகதி, இடம் என்பன அட்டவணையின் (7)ஆம் விடயத்தில் விவரிக்கப்பட்டவாறாதல் வேண்டும். (இதனகத்தின் பின்னர் வாடகை என அழைக்கப்படும்).
(2) ஆதனம் அல்லது அவற்றுள் ஏதேனுமொன்று எத்தன்மையதுமான ஏதேனும் சூழ்நிலை காரணமாகவாயினுஞ்சரி இயங்காமல் அல்லது செயலிழந்திருக்கும் காலப்பகுதிக்குக்கூட குத்தகை பெறுநர் மேற்படி வாடகையைச் செலுத்துதல் வேண்டும்.

(3) குத்தகை பெறுநரிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் கொடுப்பனவை முதலில் நிலுவை வட்டி, (ஏதுமிருப்பின்), அரசாங்க விதிப்பனவுகள், இக்குத்தகை காரணமாக குத்தகை விடுநரால் உறப்பட்ட செலவுகள் என்பனவற்றை ஈடுசெய்வதற்கும் மீதி எவையுமிருப்பின் அதனை மேற்படி வாடகைக்கும் ஒதுக்கீடு செய்வதற்கான ஏக தற்றுணிபு குத்தகை விடுநருக்குண்டு என்பதற்கு குத்தகை பெறுநர் உடன்படுகின்றார்.

(4) இக்குத்தகை உடன்படிக்கைக்கெதிராக குத்தகை பெறுநரிடமிருந்து பெறப்பட்ட எவையேனும் கொடுப்பனவுகளை வேறு எந்த உடன்படிக்கையின்கீழ் குத்தகை பெறுநர் குத்தகை விடுநரிடமிருந்து வேறு ஏதேனும் ஆதனத்தை குத்தகைக்கு எடுத்துள்ளாரோ அந்த வேறு உடன்படிக்கைகளின்கீழ் வருமதியாகவுள்ளவைகள் தொடர்பில் ஒதுக்கீடு செய்வதற்கான ஏக தற்றுணிபு குத்தகை விடுநருக்குண்டு என்பதற்குக் குத்தகை பெறுநர் உடன்படுகின்றார்.

உறுப்புரை 4: 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் குறித்தசில பிரிவுகள் ஏற்புடைத்தாகாமை

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் 2ஆம் பாகத்தின் ஏற்பாடுகள்ளவன, பிரிவுகள் 11, 16, 22, 24 என்பவற்றில் அடங்கியுள்ள ஏற்பாடுகளைத் தவிரவும் இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவைகளைத் தவிர்த்தும் அவை நீங்கலாகவும் இவ்வுடன்படிக்கைக்கு ஏற்புடைத்தாகமாட்டா என்பதற்கு இவ்வுடன்படிக்கைக்கான திறத்தவர்கள் இத்தால் உடன்படுகின்றனர்.

உறுப்புரை 5: உபகரணத்தின் பயன்பாடு

பின்வருவன குத்தகை பெறுநரின் கடமையாதல் வேண்டும்:

(அ) குத்தகையின்கீழ் வழங்கப்பட்ட உபகரணத்தை தகுந்த விதத்தில் பராமரித்தல்.

(ஆ) அது எந்த நோக்கத்திறகாக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு அதனைப் பயன்படுத்துதல்; அத்துடன்

(இ) நியாயமான உராய்வுக்கும் தேய்வுக்கும் குத்தகைக்கான திறத்தவர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட எவையேனும் திரிபுபடுத்தல்களுக்கும் அமைய உபகரணம் எந்த நிலைமையில் குத்தகை பெறுநருக்கு ஒப்படைக்கப்பட்டதோ அதே நிலைமையில் வைத்திருத்தல.

உறுப்புரை 6: ஒப்படைக்கப்படாமை, தாமதமாக ஒப்படைக்கப்படல், உபகரணத்தின் ஒத்திசையாமை

குத்தகை உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட பொருள்/ஆதனம் குத்தகை பெறுநருக்கு அதன் ஒப்படைப்பிற்கென இந்த குத்தகை உடன்படிக்கையின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படாதவிடத்து அல்லது அத்தகைய காலத்தின் பின்னர் ஒப்படைக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது ஒப்படைக்கப்பட்ட பொருள்/ஆதனம் அத்தகைய பொருள்/ஆதனம் தொடர்பில் வழங்கல் உடன்படிக்கையிலுள்ள (எதுவுமிருப்பின்) நிபந்தனைகளுக்கு, நியதி உத்தரவாதங்களுக்கு அல்லது விவரக்கூறுகளுக்கு ஒத்திசையாதவிடத்து குத்தகை பெறுநர் நிதிக் குத்தகைச் சட்டத்தின் 13 (2)ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய பொருளை/ஆதனத்தை நிராகரிக்கலாம் என்பதுடன் பொருளை/ஆதனத்தை குத்தகை விடுநருக்கு திரும்பியும் கொடுக்கலாம்; அத்துடன் குத்தகை விடுநருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படும் எழுத்திலான கடிதத்தின் திகதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் இக்குத்தகை உடன்படிக்கையை முடிவுறுத்தலாம்.

**4.0 குத்தகை ஆதனத்தின் பாவனை**

4.01. குத்தகை பெறுநர் குத்தகை ஆதனத்தை இதற்கான அட்டவணை அ என்பதில் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் வைத்தல் வேண்டும். ஆயினும் குத்தகை ஆதனம் ஒரு வாகனமாக இருக்கும் விடயத்தில் பாவனையில் இல்லாதபொழுது இதற்கான அட்டவணை அ என்பதில் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அதனைப பேணுவதற்கு குத்தகை பெறுநர் கட்டுப்பட்டவராதல் வேண்டும். குத்தகை பெறுநர் குத்தகை விடுநரின் எழுத்திலான முன் சம்மதமின்றி குத்தகை ஆனத்தை வேறு ஏதேனும் இடத்திற்கு அப்புறப்படுத்துதலோ வேறு ஏதேனும் இடத்தில் மீளப் பொருத்துதலோ பயன் படுத்துதலோ அல்லது இயக்குதலோ ஆகாது.

4.02 குத்தகை பெறுநர் பின்வருவனவற்றிற்கு உடன்படுவதுடன் அவற்றை பொறுப்பேற்றும் கொள்கின்றார்:

(அ) குத்தகை பெறுநர் எல்லா நேரங்களிலும் குத்தகை ஆதனத்தை கவனமாகவும், விவேகமாகவும் கண்டிப்பாக கைத்தொழில் நியமங்களுக்கும், ஏற்புடைத்தானவிடத்து எந்தச் சூழல் நிலைமைகளின்கீழ் அத்தகைய குத்தகை ஆதனம் ஏற்றிச் செல்ல, களஞ்சியப்படுத்தப்பட, வைத்திருக்கப்பட, பயன்படுத்தப்பட, பேணப்பட அல்லது தொழிற்படுத்தப்பட வேண்டுமோ அந்தச் சூழ்நிலைகள் தொடர்பிலானவை உட்பட) அத்தகைய குத்தகை ஆதனத்திற்கு இயைபான தொழிற்பாட்டுக் கையேட்டில் அல்லது வேறு வகையில் குத்தகை ஆதனம் அதன் உற்பத்தியாளரால் அத்துடன்/அல்லது வழங்குநரால் குத்தகை ஆதனத்தின் ஒப்படைப்புடன் அல்லது அதற்கு முன்னர் அல்லது அதன் பின்னர் வழங்கப்பட்ட தொழிற்பாட்டுக் கையேட்டில அடங்கியுள்ள அறிவுறுத்துதல்களும் பணிப்புகளும் அத்தகைய அறிவுறுத்துதல்களும் பணிப்புகளும் அடங்கியிருப்பினும் சரி இல்லாவிடினும்சரி அத்தகைய அறிவுறுத்துதல்களுக்கும் பணிப்புகளுக்கும் இணங்க கஞ்சியப்படுத்துதலும் விட்டுவைத்தலும் பயன்படுத்துதலும் பேணுதலும் தொழிற்படுத்துதலும் வேண்டும.

(ஆ) குத்தகை ஆதனம் பொருத்தமானவர்களும் பயிற்றப்பட்டவர்களுமான ஆட்களினால் கையாளப்படுதலும் பயன்படுத்தப்படுதலும் இயக்கபடுதல்வேண்டும் என்பதுடன் போதியளவில பயிற்றப்படாதவர்கள் அத்துடன்/அல்லது அனுபவமில்லாவதர்கள் எனக் குத்தகை விடுநரால் கருதப்பட்ட ஆட்களினால் கையாளப்படுதலோ பயன்படுத்தப்படுதலோ அல்லது இயக்கப்படுதலோ ஆகாது.

(இ) குத்தகை ஆதனத்தின் உற்பத்தியாளரால் செயலினால் அல்லது விடயத்தினால் குத்தகை ஆதனத்தின் வழங்குநரால் அத்துடன்/அல்லது உற்பத்தியாளாரால் வழங்கப்பட்ட நியதி உத்தரவாதமும் செயற்பாட்டு உத்தரவாதமும் முழுமையாகவாயினும்சரி பகுதியளவிலாயினும்சரி செல்லுபடியற்றதாக அல்லது வலுவுக்கிட முடியாததாக வரவேணண்டுமோ அல்லது வரக்கூடுமோ அந்த ஏதேனும் செயலை அல்லது செய்யாமையை அல்லது விடயத்தை செய்தலாகாது.

(ஈ) குத்தகை ஆதனம் குத்தகை பெறுநரின் தொழிலின் சாதாரண, வழமையான நோக்கத்திற்கு (குத்தகை பெறுநர் ஒரு கம்பனி போன்ற அமைப்பொன்றாக இருக்கும் விடயத்தில்) அல்லது குத்தகை பெறுநரின் தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் குத்தகை விடுநரின் எழுத்திலான முன் அனுமதியின்றி எத்தன்மையதுமான வேறு ஏதேனும் நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுதலாகாது.

(உ) குத்தகை பெறுநர் அரசாங்கத்தினுடையதாயினும்சரி, அல்லது வேறு ஏதேனும் மாகாண அதிகாரசபையின் அல்லது ஏதேனும் மாநகர சபையின் அல்லது உள்ளூர் அதிகாரசபையுடையதாயினும்சரி அல்லது ஏதேனும் நீதிமன்றம், நியாய சபை அல்லது தகுதிவாய்ந்த அதிகாசரசபையின் அல்லது அலுவலரின் இயைபான எல்லா சட்டங்களுடனும் விதிகளுடனும் ஒழுங்குவிதிகளுடனும் அல்லது கட்டளைகளுடனும் பணிப்புகளுடனும் இணங்கியொழுகும் வகையில் குத்தகை ஆதனத்தை களஞ்சியப்படுத்துதலும் நிறுத்தி வைத்தலும் பொருத்துதலும் பயன்படுத்துதலும் பேணுதலும் தொழிற்படுத்துதலும் வேண்டும.

(ஊ) குத்தகை பெறுநர் குத்தகை விடுநரின் எழுத்திலான முன் சம்மதமின்றி குத்தகை ஆதனத்தை விற்றல், மைாற்றுதல், சாட்டுதல் செய்தல், அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல், அல்லது கீழ்க்குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல், கடனாக வழங்குதல், உரிமத்துக்குக் கொடுத்தல், அல்லது உடைமையை விட்டுக்கொடுத்தல் அல்லது ஏதேனும் வகையில் ஈடுவைத்தல், அடகு வைத்தல், பிணையம் வைத்தல், பொறுப்பித்தல் அல்லது வேறு வகையில் பாரபந்தப்படுத்துதல் ஆகாது.

(எ) குத்தகை பெறுநர் குத்தகை விடுநரின் எழுத்தினாலான முன் சம்மதமின்றி குத்தகை ஆதனத்திற்கு ஏனும் மாற்றத்தை, சேர்த்தலை அல்லது மேம்பாட்டைச் செய்தலோ அல்லது அதன் நிலைமையை மாற்றுதலோ ஆகாது; செய்யப்பட்ட எத்தன்மையதுமான அல்லது இயல்பினதுமான எல்லா திருத்தங்களும் சேர்த்தல்களும் மேம்பாடுகளும் (ஏதேனும் பாகம், உறுப்பு, துணையுறுப்பு உட்பட) குத்தகை ஆதனத்தின் ஒரு பாகமாதல் அல்லது ஒரு சேர்த்தல் ஆதல் வேண்டும்; அத்துடன் குத்தகை விடுநருக்கு உரியதாதலும் வேண்டும் என்பதுடன் இந்த குத்தகை உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தனவாதலும் வேண்டும்.

4.03 இந்த 4ஆம் வாசகத்தில் அடங்கியுள்ள எதுவும்

(அ) இதன்கண் அடங்கியுள்ள எவையேனும் மீறுகையில்;

(ஆ) குத்தகை ஆதனத்தின் உரிமையாளா் என்ற வகையில் குத்தகை விடுநரின் பொறுப்பை தற்பொழுது காப்பீடு செய்யும் அல்லது இந்த குத்தகை உடன்படிக்கையின்போது இதன் பின்னர் காப்பீடு செய்யும் காப்புறுதிப்பத்திரத்தின் அல்லது காப்புறுதிப்பரத்திரங்களின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது தேவைப்பாடுகளுக்கு முரணான முறையில் (மேலே 2.01ஆம் வாசகத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு) அல்லது

(இ) அரசாங்கத்தினுடையதாயினும்சரி, அல்லது வேறு ஏதேனும் மாகாண அதிகாரசபையின் அல்லது ஏதேனும் மாநகர சபையின் அல்லது உள்ளூர் அதிகாரசபையுடையதாயினும்சரி அல்லது ஏதேனும் நீதிமன்றம், நியாய சபை அல்லது தகுதிவாய்ந்த அதிகார சபையின் அல்லது அலுவலரின் ஏதேனும் சட்டத்திற்கு விதிக்கு, ஒழுங்குவிதிக்கு, கட்டளைக்கு அல்லது பணிப்பிற்கு முரணாக

குத்தகை ஆதனத்தின் களஞ்சியப்படுத்துகைக்கான, கையாளுகைக்கான, பாவனைக்கான, பேணலுக்கான, அல்லது தொழிற்பாட்டிற்கான பொறுப்பிலிருந்து வலுக்குறைத்தலாகாது.

குத்தகை ஆதனததின் களஞ்சியப்படுத்துகை, கையாளுகை, பாவனை, பேணல் அல்லது தொழிற்பாடு தொடர்பில் செய்யப்படும் அல்லது அதினின்றெழும் எல்லா உரிமைக்கோரிக்கைகளிலிருந்தும் கோரிக்கைகளிலிருந்தும் அல்லது விதிக்கப்படும் அல்லது செய்யப்படும் எல்லா குற்றப்பணங்களிலிருந்தும் அல்லது கோரிக்கைகளிலிருந்தும் குத்தகைக்கு விடுநரை நட்டோததரவாதம் செய்வதற்கும் கெடுதலில்லாது காப்பதற்கும் குத்தகை பெறுநர் இத்தால் உடன்படுகின்றார்.

**5.0 குத்தகை ஆதனத்தைப் பேணல்**

5.01 குத்தகை ஆதனம் ஒவ்வொன்றையும் நியாயமான நிலைமையிலும் குத்தகை விடுநர் திருப்தியுறும் வகையிலும் பேணுவதற்கும் குத்தகை பெறுநர் உடன்படுகின்றார். அது தொடர்பான எல்லா பேணல் பணியும் குத்தகை ஆதனத்தின் உற்பத்தியாளர்களின் அத்துடன்/அல்லது வழங்குநர்களின் பேணல் கையேட்டிற்கு அல்லது வேறு அறிவுறுத்துதல்களுக்கும் பணிப்புரைகளுக்கும் இணங்க அல்லது அத்தகைய கையேடுகள், அறிவுறுத்துதல்கள் அல்லது பணிப்புரைகள் வழங்கப்படாதவிடத்து கண்டிப்பாக கைத்தொழிலில் நிலவும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

5.02 குத்தகை ஆதனம் தொடர்பில் எல்லா பேணல் மற்றும் தொழிற்பாட்டு செலவுகளுக்கும் செலவினங்களுக்கும் தனித்துப் பொறுப்பாயிருப்பதற்கு குத்தகை பெறுநர் உடன்படுகின்றார். இவற்றுள் எரிபொருள், எண்ணெய், உராய்வு நீக்கிகள், பழுதுபார்த்தல்கள், மாற்றீடுகள், அல்லது உறுப்புகள் அத்துடன்/அல்லது பாகங்கள் காலா கால மற்றும் தடைசெய் பேணல்கள், பழுதுபார்த்தல் செலவுகள், மின்சாரச் சுற்றுக்களைப் பேணல், ஆளிகள், பியூஸ்கள், பாதுகாப்பு சாதனங்கள் வேறு செலவுகள், செலவினங்கள், கட்டணங்கள், உரிமங்கள், அத்துடன் குத்தகை ஆதனத்தின் அத்துடன்/அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் ஒப்படைத்தல், களஞ்சியப்படுத்துதல், கையாளுதல், பேணல், தொழிற்பாடு என்பன தொடர்பில் அல்லது எது விதத்திலும அதற்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான செலவுகளும் உட்படும் ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படமாட்டா.

5.03 குத்தகை விடுநரின் வருமான வரியையும் ஸகாத்தையும் தவிர, ஒவ்வொரு இயலய்பினதும் எத்தனமையதுமான அத்துடன் எத்தகையவருமான எவராலும் அல்லது எவருக்கும் செலுத்தப்படற்பாலனவும் அத்துடன் குத்தகை ஆதனத்தின் போக்குவரத்து, களஞ்சியப்படுத்துதல், கையாளுதல், பாவனை, பேணல் அத்துடன் தொழிற்பாடு என்பன தொடர்பிலானவையமான எல்லா கட்டணங்களையும், வரிகளையும் குற்றப்பணங்களையும் அல்லது தண்டப் பணங்களையும் பொறுப்பேற்பதற்கும் உடனடியாக செலுத்துவதற்கும் குத்தகை பெறுநர் உடன்படுகின்றார்.

5.04 மேற்கூறப்பட்ட எவையேனும் பேணல் அல்லது தொழிற்பாட்டுச் செலவுகளையும் செலவினங்களையும் அல்லது கட்டணங்கள், வரிகள், குற்றப்பணங்கள், மற்றும் தண்டப் பணங்கள் அல்லது வேறு எவையேனும் அறவீடுகள் என்பன இதன்கண் தேவைப்படுத்தப்பட்டவாறு குத்தகை பெறுநரால் செலுத்தப்படாதபட்சத்தில் குத்தகை பெறுநர் அத்தகைய செலவுகளையும் செலவினங்களையும் அல்லது கட்டணங்கள், வரிகள், குற்றப்பணங்கள், மற்றும் தண்டப் பணங்கள் அல்லது வேறு எவையேனும் அறவீடுகள் என்பவற்றைச் செலுத்தலாம் ஆனால் அதற்கான கடப்பாட்டைக் கொண்டிருக்க மாட்டார் என்பதுடன் கோரிக்கையின்மீது உடனடியாக குத்தகை பெறுநர் அதற்காக குத்தகை விடுநருக்கு செலவீடு செய்தல் வேண்டும்.

**6.0 விபத்துக்கள் மறறும் ஊறுகள்மீது காப்புறுதிக் காப்பீடு**

6.01 குத்தகை ஆதனம் முழு குத்தகைக் காலப்பகுதிக்கும் முழு மாற்றீட்டுப் பெறுமதிக்கு டக்கபுல் நிறுவனத்தால் விரிவாக காப்புறுதி/காப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

6.02 குத்தகை பெறநர் குத்தகை ஆதனத்தின்மீது காப்புறுதிக் காப்பீட்டின் முடிவுறுத்துதல் பற்றி நேரகாலத்துடன் குத்தகை விடுநருக்கு அறிவிப்பதற்கும் அத்துடன் குத்தகைத் தவணையின் முழுக் காலப்பகுதிக்கம் காப்பீடு செய்யப்படும் வகையில் (வாசகம் 2.01இல் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு) காலத்துக்குக் காலம் காப்புறுதிக் காப்பீட்டை புதுப்பிப்பதற்கும்/நீடிப்பதற்கும் பொறுப்பேற்கின்றார்.

6.03 காப்புறுதி, குத்தகை விடுநரால் பெறப்படின் அத்துடன்/அல்லது புதுப்பிக்கப்படின் அவ்வாறு செய்வதற்கான செலவு உடனடியாக குத்தகை பெறுநரால் குத்தகை விடுநருக்கு உடனடியாக செலவீடு செய்யப்படும் என குத்தகை பெறுநர் இத்தால் உடன்படுகின்றார்.

6.04 குதத்கை பெறுநரும் அவரது முகவர்களும் ஊழியர்களும் விபத்தை அல்லது சேதத்தைப் பற்றி குத்தகை விடுநருக்கும் காப்புறுதிக் கம்பனிக்கும் உடனடியாக அறிவித்தல் உட்பட மேற்படி காப்புறுதிப் பத்திரத்தின் எல்லா நியதி நிபந்தனைகளுடனும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

6.05 குத்தகை ஆதனம் குத்தகை பெறுநரால், குத்தகை பெறுநரின் ஒப்பந்தக்காரர்களால், ஊழியர்களால் முகவர்களால் களஞ்சியப்படுத்துதல், கையாளுதல், இந்த குத்தகை உடன்படிக்கையின்கீழ் அல்லது உற்பத்தியாளரின் அத்துடன்/அல்லது விநியோகத்தரின் இயைபான பேணல் அத்துடன்/அல்லது தொழிற்பாட்டுக் கையேட்டின்கீழ் அல்லது உற்பத்தியாளரின் அத்துடன்/அல்லது வழங்குநரின் அத்துடன்/அல்லது குத்தகை விடுநரின வேறு எவையேனும் அறிவுறுத்துதல்களின்கீழ் குத்தகை பெறுநரின் எவையேனும் கடப்பாடுகளை அனுசரிக்க அல்லது நிறைவேற்றத் தவறுவதன் விளைவாக பாவனை செய்தல், பேணல், அல்லது அதன் தொழிற்பாடு என்பவற்றிலிருந்து அல்லது அதன் தடங்களிலிருந்து எவரேனும் ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கு ஏற்படக்கூடிய மரணத்தில் விளைவதாயிருப்பினும்சரி வேறு வகையிலாயினும்சரி எல்லா விபத்துக்களுக்கும் ஊறுகளுக்கும் குத்தகை பெறுநர் பொறுப்பாளியாதல் வேண்டும்.

6.06 குத்தகை பெறுநர் இதன்கீழ் எந்த உரிமைக்கோரிக்கைக்கு அல்லது கோரிக்கைக்கு பொறுப்புடையவராகின்றாரோ அந்த ஏதேனும் உரிமைக்கோரிக்கை அல்லது கோரிக்கை தொடர்பிலான எவையேனும் மற்றும் எல்லா செலவுகள், அறவீடுகள் அல்லது செலவினங்கள் (சட்டத்தரணியின் கட்டணங்கள் உட்பட) என்பவற்றிற்கெதிராக குத்தகை பெறுநர் குத்தகை விடுநரை நட்டோத்தரவாதம் செய்தலும் கெடுதல் இல்லாது காத்தலும வேண்டும். அத்தகைய எதேனும் உரிமைக்கோரிக்கை அல்லது கோரிக்கை தொடர்பில் குத்தகை விடுநர் எவையேனும் பணத்தொகையை அல்லது பணத்தொகைகளை செலுத்தவேண்டியிருப்பின் அது தொடர்பில அவருக்கு எவையேனும் செலவுகள், அறவீடுகள், அல்லது செலவினங்கள் ஏற்படின் குத்தகை விடுநருக்கு அவ்வாறு ஏற்பட்ட அல்லது அவரால் உறப்பட்ட முழுத் தொகையும கோரிக்கையின்மீது குத்தகை பெறுநரால் குத்தகை விடுநருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

6.07 குத்தகை ஆதனம் ஏதேனும் காணியுடன் அல்லது கட்டிடத்துடன் பொருத்தப்பட்டிருக்கும்பட்சத்தில் குத்தகை பெறுநர் அத்தகைய காணி மற்றும் கட்டிடம் தொடர்பில் எல்லா வரிமதிப்பீட்டு வரிகளும்/வீத வரிகளும் இயைபான அரசாங்க அல்லது மாகாண அல்லது உள்ளூர் அதிகாரிகளுக்கு முறையாகவும் உரிய நேரத்திலும் செலுத்தப்படுவதையும் அத்கைய கட்டிடங்கள் விலைமதிப்பீடு செய்யப்படடு தீ, கொள்ளை, வெள்ளம், புயல், பயங்கரவாதத் தாக்குதல், கலவரம், குண்டு வெடிப்பு மற்றும் வேறு தெய்வச்செயல்கள் என்பவற்றிற்கெதிராக முறையாக காப்புறுதி செய்யப்படுதலும் வேண்டும்.

**7.0 உரித்து**

7.01 இதன்கீழ் குத்தகைக்கு விடப்படும் குத்தகை ஆதனத்திலும் குதத்கை ஆதனத்திற்கும் எல்லா உரிமைகளும் உரித்தும் சொத்துவமும் அத்துடன் அது தொடர்பிலான எல்லா கடப்பாடுகளும் இநத் குதத்கை உடன்படிக்கையின் நியதிகளுக்கமைய எல்லா நேரங்களிலும் குத்தகை விடுநருக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல் வேணடும் என்பதுடன் அத்தகைய உரிமைகளை, உரித்தை அல்லது சொத்துவத்தை பங்கப்படுத்தும் ஏதேனும் செய்கையை செய்யாதிருப்பதற்கு அல்லது புரியாதிருப்பதற்குக் குத்தகை விடுநர் உடம்பாடு செய்வதுடன் உடன்பட்டும் கொள்கின்றார். மேற்போந்ததன் பொதுமையை மட்டுப்படுத்தாமல் குத்தகை ஆதனம் எதனையும் அல்லது அதன் ஏதேனும் பாகததை விற்பனை செய்யாதிருப்பதற்கு கைமாற்றாதிருப்பதற்கு. சாட்டுதல் செய்யாதிருப்பதற்கு அல்லது வேறு வகையில் கையுதிர்க்காதிருப்பதற்கு அல்லது கீழக்குத்தகைக்கு விடாதிருப்பதற்கு, வாடகைக்குக் கொடுக்காதிருப்பதற்கு, கடன் வழஙகாதிருப்பதற்கு, உரிமத்தின்மீது கொடுக்காதிருப்பதற்கு, அதன் உடைமயை விட்டுக்கொடுக்காதிருப்பதற்கு அல்லது மறைத்து வைக்காதிருப்பதற்கு கைவிடாதிருப்பதற்கு அல்லது ஏதேனும் கையில் ஈடு வைக்காதிருப்பதற்கு, அடைவு வைக்காதிருப்பதற்கு, பிணைப்பொறுப்பாக்காதிருப்பதற்கு, பொறுப்பிக்காதிருப்பதற்கு அல்லது வேறு வகையில் பாரபந்தம் செய்யாதிருப்பதற்கு, சேதப்படுத்தாதிருப்பதற்கு அல்லது அழிக்காதிருப்பதற்கு குத்தகை பெறுநர் உடன்படுகின்றார்.

7.02 குத்தகை விடுநர் குத்தகை ஆதனம் குத்தகை விடுநரிடமிருந்து குத்தகைக்கு விடப்பட்டது என்பதற்கு அதில் சுட்டுச்துண்டிடுவதற்கு உரித்துடையவராதல்வேண்டும்.

7.03 குத்தகை விடுநருக்கு ஏற்படக்கூடிய அலலது மேலே 7.01 என்னும் வாசகத்தின் மீறுகையின் விளைவொன்றாக ஏற்படக்கூடிய ஏதேனும் விதமான அத்துடன் எல்லா உரிமைக்கோரிக்கைகளுக்கும், இழப்புகளுக்கும் செலவுகளுக்கும், சேதங்களுக்கும் சட்டத்தரணியின் செலவுகள் உட்பட வழக்குகளுக்கும் செலவின்ஙகளுக்கும் எதிராக குத்தகைவிடுநரை நட்டோத்தரவாதம் செய்துவைப்பதற்கும் கெடுதலில்லாது காப்பதற்கும் குதத்கை பெறுநர் இத்தால் உடன்படுகின்ர்.

7.04 குத்தகை விடுநருக்கும் குத்தகை பெறுநருக்கும் இடையில் குத்தகை ஆதனம் தனிப்பட்டதும் அசைவுள்ளதுமான ஆதனமாக இருத்தல்வேண்டும் என்பதுடன் குத்தகை ஆதனம் பொறித்தொகுதியாக அத்துடன்/அல்லது உபகரணமாக இருக்கும்பட்சத்தில் அது காணியில் அல்லது கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருப்பது எவ்வாறிருப்பினும் குத்தகை விடுநரின் சொத்துவத்தில் தொடர்ந்திருத்தல்வேண்டும். குத்தகை ஆதனத்தை ஏதேனும் அத்தகைய பொறித்தொகுதியை அல்லது உபகரணத்தை அத்தகைய ஆதனத்தில் பொருத்துவதன்மூலம் அலலது அதிலிருந்து அப்புறப்படுத்துவதன்மூலம் குத்தகை விடுநரால் அல்லது குத்தகை பெறுநரால் பொருத்தப்பட்டிருப்பினும்சரி அல்லது அப்புறுப்படுத்தப்படிருப்பினும்சரி அத்தகைய காணிக்கு அல்லது உபகரணத்திற்கு ஏற்படும ஏதேனும் சேதத்திற்கு குத்தகை பெறுநரே பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேதம் தொடர்பில் செய்யப்படும் எல்லா உரிமைக்கோரிக்கைகளுக்கும் எதிராக குத்தகை பெறுநர் குத்தகைவிடுநரை நட்டோத்தரவாதம் செய்துவைத்தலும் கெடுதலில்லாது காத்தலும் வேண்டும்.

### 8.0 குத்தகை ஆதனத்தை திருப்பிக்கொடுத்தல்

8.01 குத்தகைத் தவணையின்போது அல்லது காலம் கழிவதன்மூலம் அல்லது வேறு வகையில் அது முடிவுறுத்தப்படுவதன்மீது அல்லது குத்தகைத் தவணையின் நீடிப்பின்போது அல்லது அது முடிவுறுத்தப்படுவதன்மீது ஏதேனும் நேரத்தில் குத்தகை விடுநரால் அவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்படின் குத்தகை ஆதனத்தை உடனடியாக குத்தகை விடுநருக்கு திருப்பிக் கொடுப்பதற்கு குதத்கை பெறுநர் கடப்பாடுடையவராவார்.

8.02 குத்தகை ஆதனத்தை திருப்பிக்கொடுத்தலானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை "ஆ" என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறான அதே இடத்திலாதலும் ஆரம்ப நிலைமையிலும் உராய்வுகளும் தேய்வுகளும தவிர சீரான ஒழுங்கிலும் இருத்தலும் வேண்டும்.

8.03 குத்தகை ஆதனத்தை மேலே கூறப்பட்டவாறு திருப்பிக்கொடுக்கையில் அது நியாயமான உராவுய்களுக்கும் தேய்வுகளுக்கும் அமைய இந்த குத்தகை உடன்படிக்கை தொடங்கிய நேரத்தில் இருந்த அதே நிலைமையில் இருத்தல்வேண்டும். குத்தகை பெறுநரும் குத்தகை விடுநரும் அல்லது அவரவர்களின் முகவர்களும் குத்தகை ஆதனததை பரிசீலனை செய்து அதன் நிலைமை பற்றி கூட்டாக கையொப்பமிடப்பட்ட அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்வேண்டும்.

### 9.0 பொறுப்பை வரையறுத்தல்

9.01 ஏதேனும் நோக்கதிற்கு ஏதேனும் போதுமாந்தன்மையில்லாமையிலிருந்து குத்தகை பெறுநரால் அல்லது குத்தகை பெறுநரின் ஒப்பந்தக்காரரால், முகவர்களால் அல்லது ஊழியர்களால் ஆதனத்தின் தவறான பாவனை, துர்பிரயோகம், போதியளவு பேணல் அல்லது கவனம் இல்லாமை என்பவற்றிலிருந்து அல்லது ஆதனத்தின் பாவனையின் இழப்பிலிருந்து அல்லது தடங்கிலிலிருந்து நேரடியாகவோ அல்லது நேரடியாக அல்லாமலோ

(அ) குத்தகை பெறுநரால்;
(ஆ) குத்தகை பெறுநரின் எவரேனும் ஒப்பந்தக்காரரால் அல்லது முகவரால்;
(இ) அவரவர்களின் எவரேனும் ஊழியர்களால்; அல்லது
(ஈ) எவரேனும் மூன்றாம் திறத்தவரால்

உறப்பட்ட ஏதேனும் இயல்பினதான அல்லது விதத்திலான ஏதேனும் இழப்புப (ஆதனத்தின் அல்லது உயிரின் இழப்பு அத்துடன்/அல்லது உடல்/அல்லது உள ரீதியிலான ஊறு காரணமாக ஏற்படும் இழப்பு உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாமல்) சேதம், உரிமைக்கோரிக்கை, கோரிக்கை, பொறுப்பு, செலவு அல்லது செலவினம் அல்லது தொழிலின், இலாபங்களின் அதன் விளைவாக ஏற்படும் சேதம அல்லது எத்தன்மையதுமான வேறு ஏதேனும் சேதம் எதற்கும் குத்தகை விடுநர் பொறுப்பாளியாக மாட்டாது என இத்தால் உடன்பட்டுக்கொள்ளவும் விளங்கிக்கொள்ளவும்படுகின்றது.

9.02 குத்தகை விடுநர் அவ்வாறு செய்வதிலிருந்து தெய்வச்செலினால் (வாசகம் 13.06) தடுக்கப்படின் இந்த குத்தகை உடன்படிக்கையின் எவையேனும் நியதிகளை நிறைவேற்றுமாறு தேவைப்படுத்தப்படுதலாகாது என்பதுடன் அதிலிருந்து குதத்கை பெறுநருக்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்பிற்கு அல்லது சேதத்திற்குப் பொறுப்புடையதுமாதலாகாது.

9.03 ஆதனம் அல்லது அதன் ஏதேனும் பாகம் தெய்வச் செயலின் சம்பவத்தால் சேதப்படுத்தப்படின் ஆனால் பழுதுபார்க்கப்படக்கூடிய தன்மையில் இருப்பின் குத்தகை விடுநர் அதன் ஏகத் தற்றுணிபின்படி ஒன்றில் குத்தகை ஆதனத்தைப் பழுதுபார்க்கலாம் அன்றேல் குத்தகை பெறுநருக்கு எழுத்திலான அறிவித்தலின்மூலம் (அறிவித்தல் வாசகம் 13.04) இந்த குத்தகை உடன்படிக்கையை முடிவுறுத்தலாம் அன்றேல் இந்த உடன்படிக்கை அற்றப்போதை அனுமதிக்கலாம் (வாசகம் 2.03ஐப் பார்க்கவும்). குததகை விடுநர் அத்தகைய ஆதனத்தை பழுதுபார்க்கத் தீர்மானித்தால் குத்தகை விடுநர் அத்தகைய பழுதுபார்த்தலுக்கு தானாகவே ஒழுங்குசெய்யலாம் அல்லது அத்தகைய பழுதுபார்த்தலுக்கு ஒழுங்குசெய்யுமாறு குத்தகை பெறுநருக்கு வேண்டுகோள் விடுக்கலாம் என்பதுடன் ஏற்புடைத்தான காப்புறுதி வருவாய்கள் அத்தகைய முழுச் செயலவைவும் செலுத்துவதற்குப் போதுமானதாக இல்லாவிடில் அதனைப் பழுதுபார்ப்பதற்கு உள்ளவாறான செலவுகளுக்கும் அதற்கென காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட கொடுப்பனவுக்கும் இடையிலான வித்தியாசம் குத்தகை விடுநரால் செலுத்தப்படற்காலதாதல்வேண்டும்.

9.04 இந்த குத்தகை உடன்படிக்கையின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய குத்தகை ஆதனத்தின் மீதான எவையேனும் அத்துடன் எல்லா பழுதுபார்த்தல்களும் மாற்றீடுகளும் அல்லது உறுப்புகளின் பாகங்களின் அல்லது துணையுறுப்புகளின் அல்லது பதிலீடு உபகரணத்தின் பழுதுபாாத்தல் குத்தகை பெறுநரின் செலவிலாதல்வேண்டும் என்பதுடன் குத்தகை ஆதனத்துடனான சேர்த்தல்களாகக் கருதப்படுதலும் வேண்டும். அத்துடன் அதற்கான உரித்து குத்தகை விடுநரினருக்கு உரித்தாக்கபடுதலும் அதனுடன் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

9.05 இந்த உடன்படிக்கையின் நோக்கத்திற்கு குத்தகை ஆதனத்தின் வியாபாரம் செய்யக்கூடிய தன்மை, நிலைமை அல்லது பொருத்தம் என்பதனைப் பற்றிய ஏதேனும் முறைப்பாட்டை அல்லது அது தொடர்பில் வேறு ஏதேனும் முறைப்பாட்டை குத்தகை விடுநர் வெளிப்படையாகவாயினும்சரி உட்கிடையாகவாயினும்சரி செய்யவில்லை என்பதுடன் செய்யவும் மாட்டாது. அத்துடன் இதன்கண் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வாடகைத் தொகைகளைச் செலுத்துவதற்கு இதன்கீழ் குத்தகை பெறுநரின் கடப்பாடுகள் குத்தகை ஆதனத்தின் வியாபாரம் செய்யக்கூடிய தன்மை, நிலைமை அல்லது பொருத்தம் தொடர்பிலான ஏதேனும் குறைபாட்டால் அத்துடன்/அல்லது தவறுவதனால் எதுவித்திலும் பாதிக்கப்படுதலாகாது..

### 10.0 நட்டோத்தரவாதம்

10.01 இதன் 6ஆம் வாசகத்தில் (விபத்துக்கள் மற்றும் ஊறுகள்மீது காப்புறுதிக் காப்பீடு) வழங்கப்பட்ட ஏதேனும் காப்புறுதிக் காப்பீடு எவ்வாறிருப்பினும் எல்லா நேரங்களிலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் குத்தகை ஆதனத்தை உடைமை கொள்வதிலிருந்து தொழிற்படுத்தவதிலிருந்து, பயன்படுத்துவதிலிருந்து தவறான பயன்பாட்டிலிருந்து அல்லது அது தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட அல்லது பங்களிப்பு செய்யப்பட்ட அல்லது அது தொடர்பில் அல்லது அதனின்றெழும் எல்லா குற்றப்பணங்களுக்கும் தண்டப்பணங்களுக்கும் பொறுப்புக்களுக்கும் உரிமைகோரிக்கைகளுக்கும் இழப்புகளுக்கும் செலவுகளுக்கும் சேதங்களுக்கும் வழக்குகளுக்கும் செலவினங்களுக்கும் சட்டத்தரணியின் கட்டணம் உட்பட (குத்தகை விடுநரிடமிருந்து குத்தகை ஆதனம் தொடர்பில் வருமதியான வரிகள் அல்லது உரிமக் கட்டணங்கள் அல்லது பிரிவுக் கட்டணங்கள் என்பவனவற்றைத் தவிர்த்தும் அவை தவிரவும்) குத்தகை பெறுநர் எல்லா நேரங்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும் குத்தகை விடுநரை நட்டோத்தரவாதம் யெ்வார் என குத்தகை பெறுநர் குத்தகை விடுநரை நட்டோத்தரவாதம் செய்வார் என குதத்கை பெறுநர் இத்தால் உடம்பாடு செய்வதுடன் உடன்பட்டுக்கொள்கின்றார். அத்தகைய பொறுப்பு முழு குத்தகை ஆதனம் தொடர்பில் அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பில இந்த குத்தகை உடன்படிக்கையின் முடிவுறுத்துதலால் பாதிக்கப்படுதலாகாது.

10.02 குத்தகை பெறுநருக்கு எதிராக அனர்த்தத்தின், நிறைவேற்றலின், அல்லது குத்தகை பெறுநருக்கெதிராகக் கொணரப்பட்ட, வலுவுக்கிடப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட வேறு சட்ட நடவடிக்கைமுறையின்கீழ் குத்தகை ஆதனத்தின் எல்லா இழப்புகளுக்கும் அல்லது பறிமுதலுக்கும் எதிராக அல்லது அதன் விளைவாக ஏற்படும் ஏதேனும் அத்துடன் எல்லா இழப்புகளிலிருந்தும் அவற்றிற்கெதிராகவும் குத்தகை பெறுநர் குத்தகை விடுநரை நட்டோத்தரவாதம் செய்தலும் கெடுதலில்லாது காத்தலும் வேண்டும்.

10.03 இந்த குத்தகை உடன்படிக்கையில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்

(அ) குத்தகை பெறுநரால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் குத்தகை ஆதனத்தின் பயன்பாட்டிலிருந்து அல்லது தொழிற்பாட்டிலிருந்து அதன் ஊடாக உற்பத்திப் பொருட்களுக்கு (ஏதுமிருப்பின்);
(ஆ) அத்தகைய உற்பதிபொருட்களின் விளைபயனுக்கு அல்லது வியாபாரம் செய்யத்தகு தன்மைக்கு

குத்தகை விடுநர் எத்தன்மையதுமான ஏதேனும் வகையில் பொறுப்புடையதாதலாகாது என இதற்கான திறத்தவர்கள் உடன்படுகின்றன.

குத்தகை ஆதனத்தினின்று பெறப்பட்ட ஏதேனும் உற்பத்திப் பொருளின் களஞ்சியப்படுத்துகை, விற்பனை, பாவனை, அல்லது நுகர்வு தொடர்பில் அல்லது அதினின்றெழும் குத்தகை விடுநருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது திறத்தவருக்கு எதிராகத் தொடரப்பட்ட அல்லது அதனால் உறப்பட்ட எல்லா வழக்குகளுக்கும் வழக்கு நடவடிக்கைகளுக்கும் பொறுப்புகளுக்கும் உரிமைக்கோரிக்கைகளுக்கும் இழப்புகளுகளுக்கும் சேதங்களுக்கும் செலவுகளுக்கும் செலவினங்களுக்கும் எதிராக குத்தகை பெறுநர் குத்தகை விடுநரை நட்டோத்தரவாதம் செய்தலும் நட்டோத்தரவாதம் செய்துவைத்தலும் வேண்டும்.

## 11.0 தவணை தவறுகையும் முடிவுறுத்துதலும்

### 11.01 பரஸ்பர உடன்படிக்கையின் மூலம் முடிவுறுத்துதல்

(அ) இந்த குத்தகை உடன்படிக்கையின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய இரு திறத்தவர்களுள் எவரேனும் திறத்வர் இந்த குத்தகை உடன்படிக்கையை ஏதேனும் நேரத்தில் முடிவுறுத்தலாம். ஆயினும். இந்த குத்தகை உடன்படிக்கைக்கு இணங்க (வாசகம் 13.04) மற்ற திறத்தவருக்கு எழுத்திலான அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தொண்ணூறு நாட்கள் (90) பூர்ததியடைந்ததன்மீது பயனுறுதல் வேண்டும்.

(ஆ) மேற்கூறப்பட்ட அறிவித்தல் வழங்கப்பட்டமை எவ்வாறிருப்பினும் இந்த உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகள் இந்த குத்தகை உடன்படிக்கையின்கீழ் குத்தகை பெறுநரின் எல்லா கடப்பாடுகளும் (குத்தகை ஆதனம் குத்தகை உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க நல்ல தொழிற்படு நிலைமையில் குத்தகை விடுநருக்கு திருப்பிக்கொடுக்கும் உடப்பாடு உட்பட) முறையாக நிறைவேற்றப்பட்டு இதன்கீழ் வருமதியான எல்லா கொடுப்பனவுகளும் குத்தகை விடுநர் திருப்தியுறும் வகையில செலுத்தப்படும்வரை மேற்கூறப்பட்ட அறிவித்தல் முழு வலுவிலும் பயனுறுதியுடனுமிருத்தல் வேண்டும்.

11.02 இதன்கண் குறிப்பிடப்பட்டவற்றிற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு சம்பவம் நிகழ்வதன்மீது ஏதேனும் நேரத்தில் அறிவித்தல் எதுவுமின்றி இக்குத்தகை உடன்படிக்கையை உடனடியாக முடிவுறுத்துவதற்கான உரிமை குத்தகை விடுநருக்கு இருத்தல் வேண்டும்:

(அ) இந்த குத்தகை உடன்படிக்கையின் நியதிகளின்படி குத்தகை பெறுநரால் செலுத்தப்படற்பாலதான எவையேனும் வாடகைத் தொகைகளை, அறவீடுகளை அல்லது வேறு பணத்தொகைகளை அவை வருமதியாகின்றவாறும் வருமதியாகின்றபோதும் குத்தகை பெறுநர் செலுத்தத் தவறினால்;

